# கலைஞர் பங்கேற்பாளர் இசைவுப் (ஒப்புதல்) படிவம்
(சுவடுகள், நிதி உதவி: பழங்குடியினர் நல இயக்குநரகம், தமிழ்நாடு அரசு)

**1.** பங்கேற்பாளர் விவரங்கள்

1. கலைஞர் / கலைஞரின் பெயர்: ___________________________
2. கலை வடிவம் / பாரம்பரியம்: ______________________________
3. நிகழ்ச்சியின் தலைப்பு (ஏதேனும் இருந்தால்) ____________________________
4. சமூகம் / பழங்குடி: ____________________________
5. நிகழ்ச்சியின் தேதி: ____________________________
6. நிகழ்ச்சியின் இடம்: ______________________________

**2.** ஆவணப்படுத்தலின் நோக்கம்

இந்த ஆவணப்படுத்தல, தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் நல இயக்குநரகத்தின் ஆதரவுடன் செயல் படும் சுவடுகள் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

ஆவணப்படுத்தலின் நோக்கம்:

1. பாரம்பரிய மற்றும் பழங்குடி கலை வடிவங்களைப் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்,
2. கல்வி, ஆராய்ச்சி மற்றும் காப்பக ஆதாரங்களை உருவாக்குதல்,
3. எதிர்கால சந்ததியினருக்கான பொது விழிப்புணர்வு மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை ஆதரித்தல்.
4. உங்களின் பங்கேற்பு அருவமான கலாச்சார பாரம்பரியத்தின் நீண்டகால பாதுகாப்பிற்கு பங்களிக்கிறது.

**3.** பங்கேற்பின் தன்மை

நீங்கள் ஒரு கலைஞராகவும் அறிவுடையவராகவும் சுயமாக முன்வந்து பங்கேற்கிறீர்கள். உங்களின் பங்கேற்பில் பின்வருவன அடங்கும்:

- பாரம்பரிய கலைகளை நிகழ்த்துவதற்கு அல்லது செயல் விளக்கம் அளிக்க
- ஆடியோ, வீடியோ, புகைப்பட அல்லது பிற டிஜிட்டல் ஆவணங்களின் படைப்பில் பங்கேற்க
- நிகழ்ச்சி தொடர்பான சூழல் அல்லது வாய்வழி தகவல்களைப் பகிர்ந்துகொள்ள

பதிவு செய்யும் போது எந்த நேரத்திலும் நீங்கள் இடைநிறுத்தலாம், மறுக்கலாம் அல்லது விலகலாம்.

**4.** சட்ட அடிப்படை மற்றும் கலைஞரின் உரிமைகள்

இந்திய பதிப்புரிமைச் சட்டம், 1957 இன் பிரிவு 38A இன் கீழ், நீங்கள் இக்கலையின் கலைஞராக அங்கீகரிக்கப்படுகிறீர்கள், மேலும் இதற்கு தொடர்புடைய அனைத்து தார்மீக மற்றும் பொருளாதார உரிமைகளையும் தக்க வைத்துக் கொள்கிறீர்கள்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன் மூலம், உங்கள் கலைபடப்பின் உரிமையை நீங்கள் மாற்றித் தரவில்லை.

**5.** வழங்கப்பட்ட உரிமம் (பயன்பாட்டின் நோக்கம்)

இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம், நீங்கள் சுவடுகள் தளத்திற்குப் பின்வரும் உரிமத்தை வழங்குகிறீர்கள்:

- தனித்துவமற்ற
- ராயல்டி இல்லாத
- நிரந்தரமான (காலாவதியாகாத)
- மாற்ற முடியாத
- வணிக நோக்கமற்ற

உரிமம் பின்வருவனவற்றிற்கு வழங்கப்படுகிறது:

- உங்கள் நிகழ்ச்சியைப் பதிவு செய்தல் (ஆடியோ, வீடியோ, நிழற்படங்கள் மற்றும் தொடர்புடைய வடிவங்கள்)
- அந்த உள்ளடக்கத்தை டிஜிட்டல் மயமாக்குதல், ஆவணப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்
- கல்வி, ஆராய்ச்சி, கலாச்சார மற்றும் பொது விழிப்புணர்வு நோக்கங்களுக்காக அந்த உள்ளடக்கத்தை பயன்படுத்தும் படி செய்தல்
- கண்காட்சிகள், ஆவணப்படுத்தல், கற்பித்தல் அல்லது கல்விசார் குறிப்புகளுக்காக அதன் பகுதிகளைப் பயன்படுத்துதல்

இந்த உரிமம் உங்கள் நிகழ்ச்சியை வணிக ரீதியாக விற்பனை செய்யவோ, துணை உரிமம் வழங்கவோ அல்லது வணிக ரீதியாகச் சுரண்டவோ அனுமதிக்காது.

**6.** உரிமை மற்றும் தார்மீக உரிமைகள்

- உங்கள் நிகழ்ச்சியின் மீதுள்ள முழு பதிப்புரிமையும் உங்களிடமே இருக்கும்.
- பின்வரும் அணைத்து தார்மிக உரிமைகள் உங்களிடமே இருக்கும்:
    - இந்த கலை வெளிப்பாட்டின் கலைஞனாக அடையாளம் காணப்படுவதற்கான உரிமை.
    - உங்கள் படைப்பை தவறாக சித்தரித்தாலோ, மாற்றியமைத்தாலோ, அல்லது அவமதிக்கும் வகையில் பயன்படுத்தினாலோ, ஆட்சேபம் தெரிவிக்கவும்,  முறையிடவும், உரிய நடவடிக்கை கோரவும் உங்களுக்கு முழு உரிமை உண்டு.
- உங்கள் கண்ணியம், கலாச்சார ஒருமைப்பாடு அல்லது சமூக மதிப்புகளுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்த மாற்றமும் செய்யப்படாது.

**7.** பயன்படு, மெட்டாடேட்டா மற்றும் ஆவணப்படுத்துதல்

- உங்கள் படைப்பு விளக்கத் தகவல்களுடன் (பெயர், கலை வடிவம், இடம், கலாச்சார சூழல்) பட்டியலிடப்படலாம்.
- அரசாங்கத்தால் அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாளர்களால் நிர்வகிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆவணக் காப்பக அல்லது கல்வித் தளங்கள் மூலம் இந்த உள்ளடக்கங்கள் பயன்படுத்தும்படி செய்யப்படலாம்.
- ஆவணக் காப்பக நடைமுறைகள் மற்றும் பண்பாட்டு உணர்திறன் விதிமுறைகள் பயன்படு விதிமுறைகளை நிர்வகிக்கும்.

**8.** கௌரவத் தொகை

உங்கள் பங்கேற்பைப் அங்கீகரிக்கும் விதமாக, உங்களுக்கு கௌரவத் தொகை வழங்கப்படும்.

இந்தத் தொகை:

- ஊதியம் அல்லது உரிமைகளை விற்பது அல்ல
- உரிமையை மாற்றுவதில்லை
- உங்கள் எதிர்கால நிகழ்ச்சிகளையோ அல்லது உங்கள் கலையின் வணிகப் பயன்பாட்டையோ கட்டுப்படுத்தாது

**9.** தெளிவுபடுத்தப்பட்ட இசைவு

கீழே கையொப்பமிடுவதன் மூலம், நீங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகிறீர்கள்:

- இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் மற்றும் விதிமுறைகளை நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள்.
- கேள்விகள் கேட்க உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- நீங்கள் உங்கள் தன்னிச்சையான மற்றும் தெளிவுபடுத்தப்பட்ட இசைவை வழங்குகிறீர்கள்

| கலைஞர் | சுவடுகல் சார்பாக |
|---|---|
| பெயர்: | பெயரம் பதவியும்: |
| கையொப்பம்: | கையொப்பம்: |
| தேதி: | தேதி: |